**சுருக்கம்**

சுற்றுலா – 41 – வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி, 2014–15 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் நடத்தப்பெறுதல் – மருத்துவக் கல்வித் துறை மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – பங்கேற்றல் – நிதி ஒதுக்கீடு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஆர்–2) துறை

அரசாணை(பத்தாண்டு)எண். 1301

நாள்: 02.12.2014
திருவள்ளுவர்ஆண்டு 2045
ஜய, கார்த்திகை – 16.

படிக்க:

அரசாணை (நிலை) எண்.284, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத் (சு3) துறை, நாள்:20.11.2014

* * * * * *

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் சென்னைத் தீவுத்திடலில் டிசம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் நடத்தப்படவுள்ள 41–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் பங்கேற்க அனுமதியளித்தும் நிதி ஒதுக்கீடு ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது மேற்கண்ட ஆணையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் இயங்கும் மருத்துவக் கல்வித்துறைக்கு ரூ.1,38,600/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து அறுநூறு மட்டும்), இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறைக்கு ரூ.1,38,600/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறைக்கு ரூ.1,38,600/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து அறுநூறு மட்டும்), ஆக மொத்தம் ரூ.4,15,800 (ரூபாய் நான்கு இலட்சத்து பதினைந்தாயிரத்து எண்நூறு மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2) இதனை அரசு கவனமாக ஆராய்ந்து மருத்துவக் கல்வித் துறைக்கு ரூ.1,38,600/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து அறுநூறு மட்டும்), இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறைக்கு ரூ.1,38,600/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறைக்கு ரூ.1,38,600/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து அறுநூறு மட்டும்), ஆக மொத்தம் ரூ.4,15,800 (ரூபாய் நான்கு இலட்சத்து பதினைந்தாயிரத்து எண்நூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு தொகுதி–1 பிரிவுக்கூறு 99ன் படி மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட, தொகைகளை மேற்குறிப்பிட்ட துறைகளின் இயக்குநர்கள் மற்றும் ஆணையர் முன் பணமாக கருவூலகத்திலிருந்து பெறுவதற்கும் அதனை உரிய விரிவான பட்டியல் மற்றும் செலவு சீட்டுகளை சமர்ப்பித்து அதனைத் தீர்வு செய்வதற்கும் அரசு அனுமதி வழங்குகிறது.

3) இச்செலவினங்கள் கீழ்க்கண்ட செலவு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

அ) 2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் 05 – மருத்துவக் கல்வி – பயிற்சி மற்றும் ஆராய்ச்சி 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – ஐ – திட்டத்தில் சேராதது AA – மருத்துவக்கல்வி இயக்ககம் – 08 – விளம்பரமும் பிரச்சாரமும் – 02 – பொருட்காட்சி – (த.தொ.கு.எண். 2210–0101 AA 0827)

ஆ) 2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் – 02 – நகர்ப்பகுதி சுகாதார பணிகள் ஏனைய மருத்துவமுறைகள் 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் 1 – திட்டத்தில் சேராதது AA இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் – 08 விளம்பரமும் பிரச்சாரமும் – 02 பொருட்காட்சி (த.தொ.கு.எண்.2210 02 001 AA 820)

இ) 2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் 06 – பொது சுகாதாரம் 113 – பொது சுகாதார விளம்பரம் 1 திட்டத்தில் சேராதது AE – பொருட்காட்சி – மக்கள் தொடர்பு சாதன பிரிவுகள் 08 விளம்பரமும் பிரச்சாரமும் – 02 பொருட்காட்சி – (த.தொ.கு.எண்.2210 06 113 AE 0821)

(ஆளுநரின் ஆணைப்படி)

(ஜெ.ராதாகிருஷ்ணன்)
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10
ஆணையர், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை, சென்னை–106.
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, இயக்குநர், சென்னை–6.
மாநில கணக்காய்வுத் தலைவர், செ–18/35
சம்பளம் (ம) கணக்கு அலுவலர், செ.5/1/35.

<u>நகல்</u>
சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத் (சு3) துறை, செ–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை–9.
உதிரி /இருப்புக் கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்